الدرس العاشر
الإيمان وأركانه

பாடம் - *10*
ஈமானும் அதன் அடிப்படைகளும்

ஈமான்(நம்பிக்கை) : சொல்,செயல்,நம்பிக்கை ஆகும்

சொல்: அது நாவால் மொழிவதாகும்,திக்ரு செய்தல், தஸ்பீஹ் செய்தல், பாவமன்னிப்பு தேடுதல் இது போன்றவைகளாகும்.

செயல்: அனைத்து வகை வழிபாடுகளையும் அல்லாஹ் சொல்லிய வழிமுறையில் நிறைவேற்றுவதாகும்

உதாரணமாக : தொழுகை,ஸகாத்,நோன்பு,ஹஜ் போன்ற வழிபாடுகளாகும்

நம்பிக்கை: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறுயாருமில்லை முஹம்மது நபி(ஸல்)அவர்கள் அல்லாஹ்வுடைய தூதர் என்று உள்ளத்தால் ஏற்றுக்கொள்வதாகும்.

## ஈமானின் அடிப்படைகள்

ஈமானுக்கு சில அடிப்படைகள் இருப்பதாக குர்ஆனும் ஹதீஸும் கூறுகின்றன. அவை, அல்லாஹ்வையும் அவனது வானவர்களையும், அவனுடைய வேதங்களை யும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும், விதியையும் அதாவது அதன் நல்லதையும் கெட்டதையும் நம்புவதாகும்.

﴿آمَنَ الرَّسُولُ بِمَا أُنْزِلَ إِلَيْهِ مِنْ رَبِّهِ وَالْمُؤْمِنُونَ كُلٌّ آمَنَ بِاللَّهِ وَمَلائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ لا نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِنْ رُسُلِهِ وَقَالُوا سَمِعْنَا وَأَطَعْنَا غُفْرَانَكَ رَبَّنَا وَإِلَيْكَ الْمَصِيرُ﴾ ﴿البقرة: ٢٨٥﴾.

அல்லாஹ் கூறுகிறான்: இந்தத் தூதர் தம் இறைவனிட மிருந்து தமக்கு அருளப்பட்டதை நம்பினார். நம்பிக்கை கொண்டோரும் (இதை நம்பினார்கள்). இவர்கள் அனைவரும் அல்லாஹ்வையும் அவனது வானவர்களையும் அவனது வேதங்களையும் அவனது தூதர்களையும் நம்பினார்கள். மேலும் அவனது தூதர்களில் எவருக்கிடையேயும் பாரபட்சம் காட்ட மாட்டோம் செவியுற்றோம் கட்டுப்பட்டோம் எங்கள் இறைவனே! உன்னிடமே மன்னிப்புக் கோருகிறோம். உன்னிடமே (எங்கள்) திரும்புதல் உண்டு. என்றும் கூறுகின்றனர். (2:285)

عمر بن الخطاب ﷺ : ( أنَّ جبريل ـ عليه السلام ـ سأل النبي ـ ﷺ ـ عن الإيمان ، فقال له : (( الإيمان أن تؤمنَ بالله ، وملائكته ، وكتبه ، ورسله ، واليوم الآخر ، وتؤمن بالقدر خيره وشره )) ﴿ مسلم: ٨ ﴾

ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் ஈமானைப் பற்றி வினவினார்கள். அதற்கு நபி(ஸல்)அவர்கள், 'ஈமான் என்பது அல்லாஹ்வையும் அவனது வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனது தூதர்களையும், இறுதி நாளையும், விதியின் நல்லதையும் கெட்டதையும் நீ நம்புவதாகும்' என்று கூறினார்கள். அறிவிப்பவர்: உமர் இப்னுல் கத்தாப் (ரலி) நூல்: முஸ்லிம் (8)

இந்த ஆறு விஷயங்கள்தான் இஸ்லாத்தின் சரியான அடிப்படைக் கொள்கையாகும். இவற்றைக் கொண்டுதான் அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆன் அருளப்பட்டது. இவற்றைக்கொண்டுதான் அவனுடைய தூதர் முஹம்மத் நபி அவர்கள் அனுப்பப்பட்டார்கள். இவற்றுக்கு ஈமானின் அடிப்படைகள் என்றும் சொல்லப்படும்.